# நவீன தமிழ்க் கவிதையின் திருப்புமுனை சோலைக்கிளி

**றமீஸ், எம்.ஏ.எம்***

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ்க் கவிதையின் நவீன மரபு கோபாலகிருஷ்ண பாரதியாரிலிருந்து தொடங்குகிறது என்பர். சுப்பிரமணிய பாரதியாரே அதன் வெளித் தெரிகிற மிகப்பெரிய அடையாளமாகும். பின்னர் பிச்சமூர்த்தி முதலானோரால் புதுக்கவிதைப் பாரம்பரியமொன்று வளர்கிறது. ஈழத்தில் மஹாகவி தொடக்கி வைத்த நவீன கவிதைப் பாரம்பரியம் சோலைக்கிளி மூலம் இன்னொரு கோணத்திற்கு நகர்கிறது. சோலைக்கிளியின் படைப்புக்களில் உள்ள மிக முக்கியமான அம்சம் அவர் கையாளுகின்ற மொழியாகும். இந்த விடயம் குறித்து இதுவரை பல விமர்சனங்கள் வந்திருக்கின்றன. அவரது கவிதைகள் கருத்துக்களைக் கோர்வையாக்கித் துருத்திக் கொண்டு வெளியே வருகின்ற செய்திகள் அல்ல. அவை உணர்வுகளினாலும் அனுபவங்களினாலும் கட்டப்பட்ட மொழிக்கோர்வை. உண்மையில் கவிதைகள் தெளிவாகக் கருத்தினை வெளிப்படுத்துகின்ற ஒரு ஊடகம் எனக் கொள்ள முடியாது. அது படிமங்களினாலும் ஏனைய அணிநயங்களினாலும் பின்னப்பட்ட ஒரு இலக்கிய வடிவம். அதன் பின்னால் நிறைய செய்திகள் குவிந்திருக்கும். இவ்வாறே சோலைக்கிளியின் கவிதைகள் எழுப்புகின்ற அதிர்வுகளினூடே நாம் அதனை விளங்கிக்கொள்ள முடியும். அவர் கையாளுகின்ற தனித்துவமான மொழியினூடாக அவர் சார்ந்த சமூகத்தின், பிரதேசத்தின் செய்திகளைத்தான் பெரும்பாலும் அவர் சொல்ல வருகின்றார். அந்த விடயங்களையும் புரிந்துகொள்கிற ஒருவரால் மாத்திரமே சோலைக்கிளியின் கவிதைகளைப் புரிந்துகொள்ள முடியும். மேலும், கவிதைகளைப் புரிந்துகொள்கிற உன்னதமான இலக்கிய மனமொன்றும் வாசகர்களுக்கு வேண்டும். இவற்றினூடாகச் சோலைக்கிளியின் கவிதைகளைப் புரிந்தகொள்வதோடு இரண்டாம் நிலைத் தரவுகளினூடாகப் பெறப்படுகின்ற ஆதாரங்களைக் கொண்டு சோலைக்கிளியின் கவிதைகளின் தனித்துவத்தைப் புலப்படுத்துவதோடு அவரது கவிதைகள் நவீன கவிதையின் திருப்புமுனையாக அமைந்து புதியதொரு வகையாக நிற்பது குறித்து நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மேலும், சோலைக்கிளியின் கவிதைகளைப் புரிந்து கொள்வதில் உள்ள இடர்ப்பாடுகளை விளக்குவதும் இக்கட்டுரையின் பணியாகும்.

**பிரதான சொற்கள்:** தமிழ்க்கவிதை, மொழி, வடிவம், திருப்புமுனை, சோலைக்கிளி

To whom correspondence should be addressed: rameezmam2009@gmail.com

*Senior Lecturer, Department of Languages, South Eastern University of Sri Lanka.